**சார்பு நீதிமன்றம், காங்கயம், திருப்பூர் மாவட்டம்**
**முன்னிலை: திரு.க.ஆனந்தன், எம்.எஸ்.ஸி.எம்.பிஎல்.எல்.எல்.எம்.,**
சார்பு நீதிபதி, காங்கயம்.

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை
(2057 திருவள்ளுவர் ஆண்டு, பராபவ வருடம் ஆடி திங்கள் 2 ம் நாள்)

**<u>அசல் வழக்கு எண்.35/2026</u>**
**<u>CNR.No.TNTI1F – 000118–2026</u>**

N.K.பழனிச்சாமி ....வாதி

/ எதிர் /

1. S.மாலதி

2. S.சங்கவி

3. S.சித்தார்த்

4. K.அருக்காணி ....பிரதிவாதிகள்

அசல் வழக்கானது இறுதியாக, கடந்த 30.06.2026 ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.D.வீரமணி, அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் அழைப்பாணை பெற்றுக்கொண்டு ஆஜராகாத காரணத்தினால் தோன்றாதரப்பினர் நிலையில் வைக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த வழக்குக் கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாகப் பரிசீலனை செய்து, வாதி தரப்பு வாதங்களைக் கேட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

தாவா சொத்து கடந்த 20.09.2018 ம் தேதிய கிரைய ஆவணப்படி வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், 09.04.2012 மற்றும் 20.09.2018 ம் தேதிய கிரைய ஆவணத்தில் உள்ள சொத்து விவரத்தில் உள்ள ரீ.ச.எண்.1149/D1 என்பது தவறு, ரீ.ச.எண்.1149/D2 A என்பதே சரியானது என விளம்புகை செய்து வாதி தாவா சொத்தை வாதி

தனித்து அனுபவிப்பதை பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்யக்கூடாது என ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்க வேண்டியும், செலவு தொகை கோரியும் வாதியால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>வழக்குரையின் சுருக்கம்:</u>

தாவா சொத்து ஆதியில் P.நாட்ராயன் மற்றும் D.சண்முகசுந்தரம் ஆகியயோருக்கு பாத்தியப்பட்டு இருந்தது. மேற்படி அவர்களிடம் இருந்து கடந்த 09.04.2012 ஆம் தேதியன்று 1 ஆம் பிரதிவாதியின் கணவரும், 2 மற்றும் 3 ஆம் பிரதிவாதிகளின் தகப்பனாரும், 4 ஆம் பிரதிவாதியின் மகனுமான K.சிவசுப்பிரமணியன் என்பவர் வெள்ளகோவில், சப்ரிடி அலுவலகத்தில் கிரைய ஆவண எண்.1475/2012 ப்படி கிரையம் பெற்றுள்ளார். பின்னிட்டு K.சிவசுப்பிரமணியனிடம் இருந்து இந்த வாதி கடந்த 20.09.2018 ஆம் தேதி தகுந்த பிரதிபிரயோஜனத்தின் பேரில் வெள்ளகோவில் சப்ரிடி அலுவலகம் எண்.3280/2018 ல் தாவா சொத்தை கிரையம் பெற்று தனி சுவாதீனம் பெற்றுள்ளார்.

2.2. தனி சுவாதீனம் அனுபவித்து வரும் நிலையில் தாவா சொத்தினை ஈடுகாட்டி வங்கியில் அடமானக்கடன் பெற கடந்த 10.06.2025 ஆம் தேதி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். அதில் 20.09.2018 ஆம் தேதிய கிரைய ஆவணத்தில் உள்ள சொத்து விபரத்தில் ரீ.ச.எண்.1149/D2A என்பதற்கு பதிலாக ரீ.ச.எண்:1149/D1 என தவறுதலாக குறிப்பிடப்பட்ட விபரம் தெரியவந்துள்ளது. ஆகையால் வாதி தான் கிரையம் பெற்ற சொத்துக்களை வைத்து வங்கிக்கடன் பெற இயலாத சூழ்நிலையில் உள்ளார். இந்நிலையில் வாதிக்கு கிரையம் கொடுத்த K.சிவசுப்பிரமணியன் என்பவர் கடந்த 29.12.2018 ஆம் தேதி இறந்து விட்டார் என்று தெரியவந்துள்ளது. இறந்துபோனவருக்கு பிரதிவாதிகள் தான் வாரிசுதாரர்கள் ஆவார்கள்.

2.3. இந்நிலையில் வாதி கடந்த 15.06.2025 ஆம் தேதியில் பிரதிவாதிகளை நேரில் அணுகி தாவா சொத்துக்களில் ஏற்பட்ட தவறான ரீ சர்வே எண்ணைப்பொருத்து பிழை திருத்தல் பத்திரம் எழுதிக்கொடுக்க பிரதிவாதிகளை கேட்டுள்ளார். ஆனால் பிரதிவாதிகள் வீண் சாக்குபோக்கு கூறி வந்துள்ளார்கள். பின்னிட்டு வாதி கடந்த 25.06.2025 ஆம் தேதியன்று பொதுமனிதர்கள் மூலமும் பிரதிவாதிகளை பிழை திருத்தல் பத்திரம் எழுதித்தர கேட்டதில் பிரதிவாதிகள் மறுத்துவிட்டார்கள். மேற்படி கிரைய ஆவணத்தில் ரீ.ச.எண்ணில் ஏற்பட்ட தவறுதலால் மட்டும் கிரைய ஆவணம் செல்லாமல் போய்விடாது. அதனால் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் பாத்தியமும் ஏற்பட வாய்ப்பில்லை. தாவா சொத்தில் கடந்த 05.07.2025 ஆம் தேதியன்று பிரதிவாதிகள் சொத்திற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து தாவா சொத்திலிருந்து வாதியை வெளியேற்ற முயற்சி செய்ததில் வாதி அருகில் உள்ளோர் அதை தடுத்துநிறுத்தினர்.

2.4. பிரதிவாதிகள் ஆள்பலமும், அரசியல் பின்புலமும் உள்ளவர்கள் என்பதால் சட்டத்தை மீறிய செயலை தடுத்து நிறுத்தி வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை நீதிமன்ற உத்தரவின்றி அடையமுடியாது. ஆகையால் தாவாச்சொத்தினை கடந்த 20.09.2018 ஆம் தேதிய கிரைய ஆவணப்படி வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், கடந்த 09.04.2012 மற்றும் 20.09.2018 ஆம் தேதிய கிரைய ஆவணத்தில் உள்ள சொத்து விவரத்தில் உள்ள ரீ.ச.எண்:1149/D1 என்பது தவறு, ரீ.ச.எண்:1149/D2A என்பதே சரியானது என்று விளம்புகை செய்தும், தாவா சொத்தினை வாதி தனித்து பாத்தியப்பட்டு அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்து கட்டளையும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி இத்தாவா வாதியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**03.** தாவாவில் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணையை சார்வு செய்யப்பட்டு அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றாதரப்பினர் நிலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பிராது சங்கதிகளை மறுத்து எதிர்வழக்காடவும், வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தியுள்ள சாட்சி மற்றும் சான்றாவணங்களை மறுத்துரைக்கவும் பிரதிவாதிகள் முன்வரவில்லை. இந்நிலையில், தாவாவில் வாதிக்கு, தாவாப் பரிகாரம் கிடைக்கக்கூடியதா? இல்லையா? என்பது இந்நீதிமன்றத்தால் முடிவு காண வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

**04.** வாதி தரப்பில் N.K.பழனிச்சாமி வா.சா.1 ஆக இந்நீதிமன்றத்தில் வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளனர். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

05. **தீர்வு காண வேண்டிய பிரச்சனை–**

வழக்குப் பரிகாரம் வாதிக்குக் கிடைக்கத்தக்கதா?

06. **தீர்வு முடிவு**

வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞரின் வாதத்தைக் கேட்டு வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் பரிசீலனை செய்துள்ளது. வழக்குரை சங்கதிகளுக்கு ஆதரவாக, வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரணைக்கு உட்படுத்திக்கொண்டுள்ளார். பிராதில் உள்ள சங்கதிகளை உறுதிப்படுத்தும் விதமாக அவரது சாட்சியம் அமைந்துள்ளது. வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6.2.** 09.04.2012 ம் தேதியிட்ட K.சிவசுப்பிரமணியன் கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் சான்றிதழ் வாசாஆ.1 ஆகவும், 20.09.2018 ம் தேதியிட்ட N.K.பழனிச்சாமி கிரையம் பெற்ற கிரையச்சான்றிதழ் வாசாஆ.2 ஆகவும், 09.08.2025 ம் தேதியிட்ட K.சிவசுப்பிமணியனின் இறப்புச்

சான்றிதழ் வாசாஆ.3 ஆகவும், 01.03.2019 ம் தேதியிட்ட K.சிவப்பிரமணியனின் வாரிசு சான்றிதழ் வாசாஆ.4 ஆகவும், 10.04.2023 ம் தேதியிட்ட சேனாபதிபாளையம் கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் வாசாஆ.5 ஆகவும், 09.08.2025 ம் தேதியிட்ட ரீ.ச.1149/D2A சிட்டா வாசாஆ.6 ஆகவும், 09.08.2025 ம் தேதியிட்ட ரீ.ச.1149/D2A அ–பதிவேடு வாசாஆ.7 ஆகவும், 09.08.2025 ம் தேதியிட்ட ரீ.ச.1149/D2A அ–பதிவேடு வாசாஆ.8 ஆகவும், 9.08.2025 ம் தேதியிட்ட ரீ.ச.1149/D2A அ–பதிவேடு வாசாஆ.9 ஆகவும், 09.08.2025 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கான அரசு வழிகாட்டி மதிப்பு வாசாஆ.10 ஆகவும், 25.11.2025 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கான வில்லங்கச் சான்றிதழ் வாசாஆ.11 ஆகவும், வாதியின் ஆதார் அட்டை வாசாஆ.12 ஆகவும் வாதி தரப்புச் சான்றாவணங்களாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6.3.** மேற்படி வாதியானவர் பிரிவு 104 பாரதிய சாஷிய அதிநயத்தின் கீழ் தன்னுடைய மெய்ப்பிக்கும் சுமையை தெளிவாக நிரூப்பித்துள்ளார். மேலும் பிரதிவாதி வாசாஆ.1 விசாரணையின் போது வராத காரணத்தினால் பிரிவு 119(g) பாரதிய சாஷிய அதிநயத்தின் கீழ் வாதி வழக்கை ஒப்புக்கொண்டுள்ளார் என இந்நீதிமன்றம் எதிரிடை அனுமானத்தை பிரதிவாதிக்கு எதிராக முன்னிறுத்த வேண்டிய அவசியமாகிறது. ஆகையால் வழக்கு பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என முடிவு செய்யப்படுகிறது.

**6.4.** மேலும் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினாலும், வாதி தரப்பு வழக்கை மறுத்து எதிர்வழக்காடவோ தனது தரப்பை நிரூபிக்கவோ வராமல் தோன்றாத் தரப்பினராகியுள்ளனர்.

**6.5.** மேற்கண்ட வாசா.1 ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக தாவா சொத்து வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டு

அவரது சுவாதீன அனுபவித்தில் இருந்து வருகின்றது என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகையால் வழக்கு பரிகாரம் வாதிக்கு கிடைக்கக் கூடியது என முடிவு செய்யப்பட்டு, தாவா பிரச்சனை இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**முடிவில்,**

வாதி தான் தாவா சொத்தின் உரிமையாளர் என விளம்புகை செய்து பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கி தாவா செலவுத் தொகையை பிரதிவாதிகள், வாதிக்கு கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டு செலவு தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 17 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K ANANTHAN
Digitally signed by K ANANTHAN
Date: 2026.07.20 08:15:43 +0530

சார்பு நீதிபதி,
காங்கயம்.

**வாதி தரப்பு சாட்சி :–**

வா.சா.1 – பழனிச்சாமி

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

| ஆவணங்களின் வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 09.04.2012 | சிவசுப்பிரமணியன் கிரையம் பெற்ற கிரைப்பத்திம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 20.09.2018 | வாதி கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 09.08.2025 | சிவசுப்பிரமணியனின் இறப்பு | நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | சான்றிதழ் | |
| வா.சா.ஆ.4 | 01.03.2019 | சிவசுப்பிரமணியனின் வாரிசு சான்றிதழ் | நகல் |
| வா.சா.ஆ.5 | 10.04.2023 | சேனாபதிபாளையம் கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் | அசல் |
| வா.சா.ஆ.6 | 09.08.2025 | ரீ.ச.1149/D2A சிட்டா | நகல் |
| வா.சா.ஆ.7 | 09.08.2025 | ரீ.ச.1149/D2A அ–பதிவேடு | நகல் |
| வா.சா.ஆ.8 | 09.08.2025 | ரீ.ச.1149/D2A சிட்டா | நகல் |
| வா.சா.ஆ.9 | 09.08.2025 | ரீ.ச.1149/D2A அ–பதிவேடு | நகல் |
| வா.சா.ஆ.10 | 09.08.2025 | தாவா சொத்திற்கான அரசு வழிகாட்டி மதிப்பு | நகல் |
| வா.சா.ஆ.11 | 25.11.2025 | தாவா சொத்திற்கான வில்லங்கச் சான்றிதழ் | நகல் |
| வா.சாஆ.12 | -- | வாதியின் ஆதார் அட்டை | நகல் |

<u>**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>:– இல்லை

K ANANTHAN Digitally signed by K ANANTHAN Date: 2026.07.20 08:15:34 +0530

சார்பு நீதிபதி,
காங்கயம்.